1992 மார்ச் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆ. கு. சீனிவாசன், முன்பே உங்களுடைய கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். ஜனநெருக்கடியான இடத்தில் நிறுத்தப்பட்டு இருக்கிறது என்று. அடுத்து, இது சம்பந்தமாக உங்களுடைய கேள்வியைக் கேளுங்கள்,

முற்பகல் 10–10

திரு. ஆ. கு. சீனிவாசன் : ஆகையால் புதியதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலையத்திற்கு அரசு போக்குவரத்துக் கழகம் சம்பந்தப்பட்ட எல்லா பஸ்களும் வந்து செல்ல வேண்டுமென்று மீண்டும் மீண்டும் நான் கேட்டுக்கொள்கிறேன். ஒரே ஒரு பேருந்து நிலையம் தான் கட்டப்பட்டிருக்கிறது. மற்ற இரண்டும் இனிமேல் தான் கட்டப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேட்கச் சொன்னேன். பேருந்து நிலையம் என்றாலே ஒரு பேருந்து நிலையம் தான் இருக்கும். அங்கே அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் விடவேண்டுமென்று கேளுங்கள்.

திரு. ஆ. கு. சீனிவாசன் : அந்தப் பேருந்து நிலையத்தில் எல்லா பஸ்களும் வந்து செல்வதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதை இந்த அரசு கவனத்திலே கொண்டு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 246. திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்,

246—

திருப்பத்தூர் தொகுதியில் சந்தனத் தொழிற்சாலை,

*5282— திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருப்பத்தூர் தொகுதியில் சந்தனத் தொழிற்சாலை ஏற்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை,

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை,

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே உயர்ந்த சந்தன மரங்கள் எனது திருப்பத்தூர் தொகுதி ஜவ்வாது மலையில்தான் விளைகிறது. ஆகையால் எங்கள் தொகுதியில் சந்தனத் தொழிற்சாலையை அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்டு இருக்கின்ற கேள்வி அங்கே இருக்கின்ற சந்தன ஆயில் தொழிற்சாலையை மீண்டும் நடத்த முடியுமா என்பதுதான். அதை முதலில் துவக்குகின்ற நேரத்திலே, ரூ. 1 கோடி செலவில் எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையை முதன் முதலிலே நாம் துவக்கினோம், கட்டிடப் பணிகள் ரூ. 76.64 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அதிலே அன்றையதினம் 1984—85 முதல் 1987—88 ஆம் ஆண்டு வரை பணியாற்றியவர்கள் 58 தினக் கூலிகளும், 9 பணியாளர்களும், 6 மேற்பார்வையாளர்களும் ஆவர். அதில் ஏறத்தாழ 1.25 டன் எண்ணெய் தயாரிக்கப்பட்டது, அதனால் இந்த அரசுக்கு ஏற்பட்டிருக்கின்ற நஷ்டம் ரூ. 75 இலட்சம். 5—11—1990 அன்று இந்த ஆலை மூடப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருடத்திற்கு ஒரு முறை வனத் துறை சார்பாக திருப்பத்தூர் தொகுதியிலே தான் சந்தன மரக் கட்டைகளை ஏலம் விடுகிறார்கள், வட நாட்டு வியாபாரிகள் அவற்றை ஏலம் எடுத்து. அவற்றிலிருந்து சோப், சென்ட், ஊது பத்தி போன்ற வாசனைப் பொருட்களை தயார் செய்து, நமது மாநிலத்திலே விற்பனை செய்கின்றார்கள், ஆகவே ஜவ்வாதுமலை அடிவாரத்தில் அரசு சந்தன மரத் தொழிற்சாலை ஒன்றை துவக்கினால் அங்கேயுள்ள மலைவாழ் மக்களுக்கு வேலைவாய்ப்பும் அரசுக்குப் போதிய வருமானமும் கிடைக்கும். ஆகவே திருப்பத்தூர் பகுதியில் சந்தன தொழிற்சாலை தொடங்க ஆவன செய்யப்படுமா என்று அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த சந்தன ஆயில் தொழிற்சாலையை மூடிவிட்டோம், உறுப்பினர் அவர்கள் புதியதாக துவங்கப்படுமா என்று கேட்கிறார்கள், ஆயில் தொழிற்சாலையைக் காட்டிலும், தனியாருக்கு ஏலம் விடு

1992 மார்ச் 17]

கின்றபோது அரசுக்கு கூடுதலாக இரண்டு மடங்கு வருமானம் வருகிறது. ஆகவே சந்தன ஆலை இப்போது தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 247, திரு. ஆர். தங்கராஜ் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்.

247—

ஆண்டிமடம் தொகுதியில் அதிகமான கைத்தறிகள் அமைத்தல்,

*2931 திரு. ஆர். தங்கராஜ்:

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், ஆண்டிமடம் தொகுதியில் அதிகமாக வாழும் நெசவாளர்கள் பயன்பெறும் வகையில், அதிகமான கைத்தறிகள் அமைப்பதில் உதவி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது திருச்சி மாவட்டம். ஆண்டிமடம் தொகுதியில் வாழும் நெசவாளர்களில். அதிக எண்ணிக்கையில் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வரப்பட்டு, அரசு அறிவித்துள்ள நலத் திட்டங்களின் மூலம் பயன்பெற்று வருகின்றனர், கூட்டுறவுத் துறையில் இல்லாத நெசவாளர்கள், தங்களுக்கு கூட்டுறவு அமைப்புகள் வேண்டுமென கோரினால் அவை பரிசீலிக்கப்பட்டு தேவைக்கேற்ப அமைக்க துறை அதிகாரிகள் உதவி புரிவார்கள்.

திரு. ஆர். தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிமடம் சட்டமன்றத் தொகுதியினுடைய பெயரை வைத்தே அங்கே வாழ்கின்ற மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை நமது மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கின்ற புரட்சித் தலைவி அவர்கள் உணர்ந்து இரண்டு முறை அங்கு வருகை புரிந்திருக்கிறார்கள், அங்கே இருக்கின்ற மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உணர்ந்திருக்கிறார்கள், அங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற துணி வகைகளை ஆந்திராவிலே இருக்கின்ற துணி வியாபாரிகள் வாங்கிக் கொண்டு சென்று அதிக லாபத்திற்கு விற்கிறார்கள், எனவே அந்த மக்களுடைய நலனை முன்னிட்டு, அங்கே உற்பத்தியாகின்ற துணி வகைகளை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்து, அதை நல்ல லாபத்திற்கு விற்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.